# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 756/2022 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 3 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. சரவணன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of July 2026.

நான் நாச்சான்குளம் கீழுரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். எனது உறவினர்கள். எங்களுக்கும் அவர்களுக்கும் சொத்து பிரச்சனை உள்ளது. கடந்த 15.03.2021ம் தேதி இரவு 09.00 மணியளவில் என் அப்பா அ.சா.1ம், என் அம்மா அ.சா.2ம் வீட்டின் முன்பு இருந்தார்கள். சொத்துபிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு 1ம் எதிரி முத்துக்கிருஷ்ணன் என் அப்பாவை பார்த்து புண்டாமவனே, தேவடியாமவனே என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசினார். அதற்கு என் அப்பா ஏன் அவ்வாறு பேசுகிறாய் என கேட்டதற்கு, கீழே கிடந்த கம்பால் என் அப்பாவை தலையின் வலது பக்கம் அடித்து காயம் ஏற்படுத்தினார். அதில் என் அப்பா கீழே விழுந்தார். அப்போது எதிரி ஜெயலதா ஒரு கம்பால் என் அப்பாவின் வலது கண்ணில் குத்தினார். அதனால் என் அப்பாவிற்கு தற்போது வரையிலும் பார்வை குறைவாகதான் உள்ளது. அப்போது மணிவாசகமும், மணிகண்டனும் என் அப்பாவின் உடம்பிலும், வயிற்றிலும் மிதித்தார்கள். எதிரிகள் எங்களை

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.10 17:58:34 +0530

பார்த்ததும் ஓடிவிட்டார்கள். உடனே என் அப்பாவை நான் நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு கூட்டிவந்தேன். அங்கு முதலுதவி அளித்துவிட்டு மேல்சிகிச்சைக்கா ஐகிரவுண்ட் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு என் அப்பா அ.சா.1 சுமார் 10 நாட்கள் போல மருத்துவமனையில் சிகிச்சைபெற்றார். போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாணை இல்லை

BOOMINATHAN
Digitally signed by BOOMINATHAN
Date: 2026.07.10 17:58:38 +0530

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 756/2022 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 2 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திருமதி. அன்னகிளி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of July 2026.

நான் நாச்சான்குளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என் கணவர். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். அவர்களுக்கும் எங்களுக்கும் சொத்துபிரச்சனை உண்டு. சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு மார்ச் மாதம் 15ம் தேதி இரவு 09.00 மணிக்கு நானும், அ.சா.1ம் எங்கள் வீட்டு முன்பு இருந்தபோது எதிரி முத்துகிருஷ்ணன் சொத்துபிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு என் கணவர் அ.சா.1யை பார்த்து தேவடியா மவனே, புண்டாமவனே என்று அசிங்கமாக பேசினார். அதற்கு என் கணவர் கேட்டபோது 1ம் எதிரி முத்துகிருஷ்ணன் கம்பால் என் கணவரின் தலையில் அடித்துவிட்டார். அதில் அவருக்கு காயம் ஏற்பட்டுவிட்டது. எதிரி ஜெயலதா கம்பால் என் கணவரின் வலது பக்க கண்ணில் குத்திவிட்டார். அதனால் அவருக்கு கண்ணில் இப்போதும் கூச்சமாக உள்ளது, சரியாக பார்க்கமாட்டார். மணிவாசம், மணிகண்டன் ஆகியோர் கீழே கிடந்த என் கணவரை வயிற்றில் மிதித்தார்கள். இதனை பார்த்த நானும்,

BOOMINATHAN
Digitally signed by BOOMINATHAN
Date: 2026.07.10 17:58:45 +0530

எனது மகன் சரணவனும் என் கணவரை மீட்டு நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு கூட்டிசென்றோம். அங்கு முதலுதவி செய்துவிட்டு ஐகிரவுண்ட் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பிவைத்தார்கள். சுமார் ஒரு வாரத்திற்கு மேல் அங்கு என் கணவர் சிகிச்சையில் இருந்தார். போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாணை இல்லை

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.10 17:58:49 +0530

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 756/2022 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 1 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. அருமைதுரை |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of July 2026.

நான் நாச்சான்குளத்தில் வசித்து வருகிறேன். முன்பு விவசாயம் பார்த்தேன். வழக்கின் எதிரிகளை தெரியும். முத்துகிருஷ்ணன் எனது உறவினர்.ஜெயலதா முத்துகிருஷ்ணனின் மனைவி. மணிவாசகம் முத்துகிருஷ்ணனின் மாமனார். மணிகண்டன் முத்துகிருஷ்ணரின் மைத்துனர். எங்களுக்கும் அவர்களுக்கும் சொத்து தகராறு உள்ளது. கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு மூன்றாவது மாதம் 15 ம் தேதி இரவு 09.00 மணியளவில் நானும் என் மனைவியும் என் வீட்டு வாசலில் இருந்தேன். அப்போது முத்துகிருஷ்ணன் சொத்து தகராறை மனதில் வைத்துக்கொண்டு தேவடியா மவனே, புண்டாமவனே என்று அசிங்கமாக பேசினார். அதற்கு நான் அவரிடம் ஏன் என்னை அவ்வாறு பேசுகிறாய் என கேட்டதற்கு முத்துகிருஷ்ணன் கம்பால் என் வலது தலையில் அடித்து காயப்படுத்தினார். நான் கீழே விழுந்துவிட்டேன். அப்போது எதிரி ஜெயலதா கம்பால் எனது வலது கண்ணில் குத்திவிட்டார். (கம்பை வைத்து குத்தியதால் எனக்கு வெளிச்சம் படும்போது கண் கூசும் அதனால் கையை

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.10 17:58:55 +0530

வைத்து மறைத்துள்ளேன் என சாட்சியமளிக்கிறார்). நான் கீழே விழுந்துகிடந்தபோது மணிவாசமும், மணிகண்டனும் எனது உடம்பில் வயிற்றில் மிதித்தார்கள். இதனை பார்த்த மகன் சரவணன் என்னை நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு கூட்டிவந்து சேர்த்தார்கள். அங்கு எனக்கு முதலுதவி அளித்துவிட்டு என்னை மேல்சிகிச்சைக்காக ஐகிரவுண்ட் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு நான் சிகிச்சையில் இருந்தபோது போலீஸார் வந்து என்னிடம் நடந்த விபரத்தை கேட்டார்கள் நான் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாணை இல்லை

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.10 17:58:59 +0530